**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–11

O.S.No.250/2017

2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 07 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கந்தசாமி | வயது: 67 |
| த/பெ. : திரு. பழனிசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

1. வாதிகள் ஆஜர் இல்லை. 2 ம் பிரதிவாதி ஆஜர். வாதிகள், பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். 2 ம் பிரதிவாதி எனக்கு அறிமுகமான நபர். அவருடைய மனைவி எனக்கு தெரியாது. அவர் மட்டும் தான் தெரியும். லோகநாதன் எனக்கு தெரியும். அவருடைய மனைவியை எனக்கு தெரியாது. லோகநாதன், கோவிந்தராஜ் ஒரு சமயத்தில் எனக்கு அறிமுகமானார்கள். கோவிந்தராஜ் மனைவி மற்றும் லோகநாதன் மனைவி என்னுடைய சொத்தில் ஒரு கூட்டாண்மை நிறுவனம் ஆரம்பித்தார்கள் என்றால் 2007 ம் வருடம் வந்தார்கள் ஆனால் ஞாபகம் இல்லை. வாடகை ஒப்பந்தம் கோவிந்தராஜும், லோகநாதனும் ஏற்படுத்தினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் **பி.வா.சா.ஆ– 2** நானும், ரேணுகாதேவியும் ஏற்படுத்தி கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரம். அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அதில் உள்ள சொத்து விவரம் சரி. நான் 2007 ம் வருடத்தில் இருந்து பாரதிதாசன் நகரில் வசித்து வருகிறேன்.

2. **பி.வா.சா.ஆ– 4** ல் வேறு விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் அங்கு வசித்தேன். அதன்பிறகு காலி செய்துவிட்டேன். லோகநாதன் 10 வருடமாக சொத்துக்கு வருவதில்லை. கோவிந்தராஜ் வாடகையை கொடுத்து வந்தார். ஒரு வடத்திற்கு முன்பு என்னுடைய சொத்தில் காலி செய்துகொடுத்துவிட்டார். **பி.வா.சா.ஆ– 4** ல் சொல்லப்பட்டுள்ள பெயர் தான் நிறுவனத்தின் பெயர். போன வருடம் வரை அந்த

நிறுவனம் அங்கு நடந்து வந்ததா என்று எனக்கு தெரியாது. பெரியளவில் நிறுவனத்தில் பெயர் பலகையை நான் பார்க்கவில்லை. கோவிந்தராஜ் வாடகை சொத்தை காலி செய்து சாவியை கொண்டு வந்து கொடுத்தார். அதில் உள்ள இயந்திரங்கள் பற்றி எனக்கு தெரியாது. **பி.வா.சா.ஆ– 4** ஒப்பந்ததில் கையொப்பம் செய்யும்போது ரேணுகாதேவியை நான் பார்க்கவில்லை. கோவிந்தராஜும், லோகநாதனும் வந்து பி.வா.சா.ஆ– 4 ல் கையொப்பம் பெற்றார்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.07 18:28:37 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.